DEPOSITION OF WITNESS
(Chapter XXV of BNSS)
IN THE COURT OF Prl. DISTRICT AND SESSIONS JUDGE
KANNIYAKUMARI AT NAGERCOIL

Calendar
Miscellaneous
Preliminary Register
Session Case Spl.S.C. No. 6/2025
Prosecution Witness – D.W. 1
Deposition of witness for Prosecution

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி. ரேவதி |
| Father's Name | : | S.S.A. ஆறுமுகம் மூப்பனார் |
| Village | : | திருநெல்வேலி டவுண் |
| Taluk | : | திருநெல்வேலி |
| Calling | : | வேலை பார்க்கவில்லை |
| Age | : | 63 |
| Date | : | 11.09.2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.09.2025.

(எதிரிகள் இன்று நீதிமன்றத்தில் ஆஜர்.)

11.09.2025

**முதல் விசாரணை (2 ஆம் எதிரி தரப்பில்) :-**

நான் இந்த வழக்கில் 2 ஆம் எதிரி. 1 ஆம் எதிரி எனது கணவர். எனது கணவருக்காகவும் சேர்த்து சாட்சியம் அளிக்கிறேன். எனக்கு பூர்வீகம் திருநெல்வேலி டவுண். எனது அப்பாவின் பெயர் S.S.A. ஆறுமுகம் மூப்பனார். அம்மாவின் பெயர் ராமலெட்சுமி. எனது பெற்றோருக்கு நாங்கள் ஐந்து குழந்தைகள். மூத்த அண்ணனின் பெயர் S.S.A. சிதம்பரம். இளைய அண்ணனின் பெயர் S.S.A.

பொன்னையா. மூத்த அக்காளின் பெயர் பூங்கொடி. இளைய அக்காளின் பெயர் வசந்தா. நான் கடைசி. எனக்கு திருமணத்திற்கு முன்பு எனது தந்தை S.S.A. என்ற பெயரில் திருநெல்வேலி, புத்தாரத்தி அம்மன் கோவில் தெருவில் லாரி டிரான்ஸ்போர்ட் நிறுவனம் நடத்தி வந்தார். 13 லாரிகள் வைத்திருந்தார். நான் வசதியான குடும்பத்திலிருந்து பிறந்தவள். எனக்கும், எனது கணவருக்கும் 09.09.1987 அன்று திருமணம் நடந்தது. அப்போது 70 பவுன் நகையும், ரொக்கமாக ரூபாய் 30,000/-மும் எனது தந்தை எனக்கு கொடுத்தார். எனக்கு மூன்று குழந்தைகள், இரண்டு பையனும், ஒரு பெண்ணும். அவர்களுக்கு திருமணம் ஆகி தனி தனியாக இருக்கிறார்கள். இந்த சூழலில்தான் ஊழல் தடுப்பு கண்காணிப்புத் துறை என் கணவரின் பெயரிலும், என் பெயரிலும் எங்களின் வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்திருப்பதாக இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள். அது பொய்யான குற்றச்சாட்டு. எனது குடும்பத்தின் பூர்வீக சொத்துக்கள் பாகம் பிரித்ததில் எனக்கும், 5 ல் ஒரு பங்கு கிடைக்கப் பெற்றது. 11.07.1996 அன்று ஏற்பட்ட கிரய பத்திரம் மூலம் நானும், மற்ற சகோதர, சகோதரிகளும் சேர்ந்து அமுதா என்பவருக்கு எங்கள் குடும்ப சொத்தை விற்றோம். எனது அம்மா 1990 ல் இறந்துவிட்டார்.

அந்த கிரய பத்திர ஆவணத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். பத்திர எண். 1633/1996 ஆக திருநெல்வேலி 1 ஆம் இணை சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவாகியுள்ள அந்த கிரயப் பத்திரத்தின் சான்றிட்ட நகல். **அது எ.த.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அதில் கண்டுள் சொத்தை ரூபாய் 57,000/- கிரய தொகை பெற்றுக் கொண்டு விற்றோம். அந்த ஆவணத்தின்படி

திருநெல்வேலி டவுண், புகழேந்தி தெருவில் இருந்த 17 வீடுகள் கொண்ட காம்ப்வுண்ட் உள்ள சொத்தின் ஒரு பகுதியை விற்றோம்.

கிரய பத்திர எண். 1634/1996 ஆக திருநெல்வேலி 1 ஆம் இணை சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவாகியுள்ள ஒரு கிரயப் பத்திரத்தின் மூலம் திருநெல்வேலி டவுண், புகழேந்தி தெருவில் இருந்த 17 வீடுகள் கொண்ட காம்ப்வுண்ட் உள்ள சொத்தின் மற்றொரு பகுதியை சரஸ்வதி என்பவருக்கு விற்றோம். அதற்காக கிரயத் தொகையாக ரூபாய் 52,000/- பெற்றுக் கொண்டோம். அந்த கிரயப்ப த்திரத்தின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **அது எ.த.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

கிரய பத்திர எண். 1635/1996 ஆக திருநெல்வேலி 1 ஆம் இணை சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவாகியுள்ள ஒரு கிரயப் பத்திரத்தின் மூலம் திருநெல்வேலி டவுண், புகழேந்தி தெருவில் இருந்த 17 வீடுகள் கொண்ட காம்ப்வுண்ட் உள்ள சொத்தின் மற்றொரு பகுதியை சுப்புலெட்சுமி என்பவருக்கு விற்றோம். அதற்காக கிரயத் தொகையாக ரூபாய் 90,000/- பெற்றுக் கொண்டோம். அந்த கிரயப்ப த்திரத்தின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **அது எ.த.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

கிரய பத்திர எண். 1636/1996 ஆக திருநெல்வேலி 1 ஆம் இணை சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவாகியுள்ள ஒரு கிரயப் பத்திரத்தின் மூலம் திருநெல்வேலி டவுண், புகழேந்தி தெருவில் இருந்த 17 வீடுகள் கொண்ட காம்ப்வுண்ட் உள்ள சொத்தின் மற்றொரு பகுதியை சுப்பையா என்பவருக்கு

விற்றோம். அதற்காக கிரயத் தொகையாக ரூபாய் 52,000/- பெற்றுக் கொண்டோம். அந்த கிரயப்ப த்திரத்தின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **அது எ.த.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

கிரய பத்திர எண். 1637/1996 ஆக திருநெல்வேலி 1 ஆம் இணை சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவாகியுள்ள ஒரு கிரயப் பத்திரத்தின் மூலம் திருநெல்வேலி டவுண், புகழேந்தி தெருவில் இருந்த 17 வீடுகள் கொண்ட காம்ப்வுண்ட் உள்ள சொத்தின் மற்றொரு பகுதியை S. பார்வதி என்பவருக்கு விற்றோம். அதற்காக கிரயத் தொகையாக ரூபாய் 74,000/- பெற்றுக் கொண்டோம். அந்த கிரயப்ப த்திரத்தின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **அது எ.த.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

அந்த கிரயங்கள் மூலம் என்னுடைய 5 ல் ஒரு பங்காக ரூபாய் 65,000/- எனக்கு கிடைத்தது. அதேபோல எங்களுக்கு சொந்தமான திருநெல்வேலி டவுண், T.S. வார்டு 7 உள்ள காலி நிலத்தில் அபிராமி நகர் என மனைகள் பிரித்து பல நபர்களுக்கு நாங்கள் ஐந்து பேரும் சேர்ந்து விற்றோம். அவ்வாறு விற்றதில் பெற்ற மொத்த கிரய தொகையான சுமார் ரூபாய் 16,00,000/- த்தில் என்னுடைய பங்காக ரூபாய் 3,80,000/- எனக்கு கிடைத்தது. அவ்வாறு விற்றதை காட்டும் அந்த சொத்து தொடர்பான வில்லங்க சான்றிதழை தாக்கல் செய்கிறேன். **அது எ.த.சா.ஆ. 7 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது**.

1999 ல் எனது பெயரில் ஒரு டாடா சுமோ வாகனத்தை கிரயம் பெற்று அதை வாடகைக்கு விட்டுவந்தேன். அந்த வாகனத்தின் எண். TN 74 K 9909. அந்த

வாகனத்தை முத்தா பைனான்ஸ் நிறுவனத்தில் ரூபாய் 2,00,000/- கடன் பெற்று வாங்கினேன். அந்த ஆர்.சி புத்தகம் ஏற்கனவே அ.த.சா.ஆ. 70 குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த ஆர்.சி. புத்தகத்தில் முத்தா பைனான்ஸிலிருந்து கடன் பெற்ற விவரம் துலங்கும். அந்த வாகனத்திலிருந்து செலவு போக மாதம் ரூபாய் 5,000/- எனக்கு வருமானம் கிடைத்தது. அந்த வாகனத்தை நான் 1999 லிருந்து 2001 வரையில் வாடகைக்கு விட்டு வருமானம் ஈட்டி வந்தேன். அதற்கு பிறகு அந்த வாகனத்தை வாடகைக்கு விடுவது இல்லை, எங்களுடைய தனிபட்ட உபயோகத்திற்கு மாற்றிக் கொண்டோம். 2003 ல் அ.சா. 25 ஆக விசாரிக்கப்பட்ட எனது அக்கா மாப்பிள்ளை சுப்பையாவுக்கு ரூபாய் 1,30,000/- க்கு விலைக்கு கொடுத்தோம். மேற்சொன்ன வருமானங்கள் எவற்றையும் அரசு தரப்பில் நீதிமன்றத்திற்கு முன் சொல்லவில்லை. முத்தா பைனான்ஸ் நிறுவனத்திலிருந்து நான் ரூபாய் 2,00,000/- கடன் வாங்கி அந்த கடன் முழுவதுமாக திருப்பி செலுத்தப்பட்டது என அந்த நிறுவனத்திலிருந்து கொடுக்கப்பட்ட 25.07.2011 தேதியிட்ட கடிதத்தை தாக்கல் செய்கிறேன். **அது எ.த.சா.ஆ. 8 ஆக அரசு தரப்பு வழக்கறிஞரால் அந்த ஆவணத்தின் உண்மைதன்மை குறித்து எழுப்பப்பட்ட ஆட்சேபனைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது**.

இரணியலில் வீடு கட்டுவதற்காக ராபர்ட் என்ற ஒப்பந்ததாரரிடம் 10.12.2000 அன்று ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்தி அந்த வீட்டை அவர் ரூபாய் 5,00,000/- செலவில் கட்டி கொடுத்தார். அந்த தொகையை நாங்கள் அதன்பிறகு பல்வேறு நாட்களில் பணம் வரும்போது செலுத்தினோம். அது குறித்து ஒப்பந்தக்காரர் அளித்த

10.12.2011 தேதியிட்ட கடிதத்தை தாக்கல் செய்கிறேன். **அது எ.த.சா.ஆ. 9 ஆக அரசு தரப்பு வழக்கறிஞரால் அந்த ஆவணத்தின் உண்மைதன்மை குறித்து எழுப்பப்பட்ட ஆட்சேபனைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது**.

நாகர்கோவில் பெத்தல் நகரில் முதல் மாடி கட்டுவதற்காக அதே ராபர்ட் என்ற ஒப்பந்ததாரரிடம் ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்தி அந்த கட்டிடத்தை அவர் ரூபாய் 2,00,000/- செலவில் கட்டி கொடுத்தார். அந்த தொகையை அவருக்கு நாங்கள் 05.08.2004 அன்று செலுத்தி விட்டோம். அதன்பிறகு பல்வேறு நாட்களில் பணம் வரும்போது செலுத்தினோம். அது குறித்து ஒப்பந்தக்காரர் அளித்த 10.12.2011 தேதியிட்ட கடிதத்தை தாக்கல் செய்கிறேன். **அது எ.த.சா.ஆ. 10 ஆக அரசு தரப்பு வழக்கறிஞரால் அந்த ஆவணத்தின் உண்மைதன்மை குறித்து எழுப்பப்பட்ட ஆட்சேபனைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது**.

LIC Housing Finance நிறுவனத்திடம் 29.06.2004 அன்று ரூபாய் 2,00,000/- வீடு கட்டுவதற்காக நானும், எனது கணவரும் வாங்கியிருந்தோம். அந்த நிறுவனத்தால் அளிக்கப்பட்ட 17.02.2011 தேதியிட்ட சான்றிதழை தாக்கல் செய்கிறேன். **அது எ.த.சா.ஆ. 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

29.06.2011 தேதியிட்ட கடிதத்தின்படி மாவட்ட வன அலுவலர், தூத்துக்குடி கோட்டம் அவர்களால் 22.08.1998 அன்று பொது சேமநலநிதி பகுதி இறுதி தொகையாக எனது கணவருக்கு ரூபாய் 51,000/- வழங்கப்பட்டது என உறுதி செய்யப்பட்டது. அந்த கடிதத்தை தாக்கல் செய்கிறேன். **அது எ.த.சா.ஆ. 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

28.08.1998 அன்று Life Insurance Corporation நிறுவனம் எனது கணவரின் பெயரில் இருந்த பாலிசி எண். 320088729. காலமுதிர்வு அடைந்து அந்த தொகையான ரூபாய் 37,500/- எனது கணவருக்கு கொடுக்கப்பட்டது என்பதை காட்டும் ஆவணத்தையும் 28.08.2003 அன்று அது குறித்து அந்த நிறுவனம் அளித்த சான்றிதழையும் தாக்கல் செய்கிறேன். **அவை எ.த.சா.ஆ. 13 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

சோதனை காலத்தில் எனக்கு வந்த வருமானம், நான் செய்த செலவு ஆகியவற்றை காட்டும் கணக்கு வழக்குகளை ஆடிட்டர் மூலம் விசாரணை அதிகாரிக்கு கொடுத்து அதை அ.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

சோதனை காலத்தில் எனது கணவருக்கு வந்த வருமானம், நாங்கள் செய்த செலவு ஆகியவற்றை காட்டும் கணக்கு வழக்குகளை ஆடிட்டர் மூலம் விசாரணை அதிகாரிக்கு கொடுத்து அதை அ.சா.ஆ. 73 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

இவற்றை கணக்கில் எடுக்காமல் விசாரணை அதிகாரி தவறாக இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார். எங்களை வழக்கிலிருந்து விடுவிக்க வேண்டும்.

குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.